**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF SESSIONS,
# MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC No. 502 / 2017** |
| **Deposition of witness for** | : | **PW : 6** |
| **Name** | : | திருமதி. பாக்கியலெட்சுமி |
| **Father's Husband's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **09.04.2025**

எதிரி-6 ஆஜர். எதிரி-1 ஆஜரில்லை. பிரிவு 317 குவிமுச கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் 2 முதல் 5 நீதிமன்றத்தில் இருந்து ஆஜராக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை உத்தரவுப்படி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**முதல் விசாரணை :**

நான் சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் அஞ்சல், நெடுங்குளத்தில், குடியிருந்து வருகிறேன். அசா.5 ஆர்த்தி எனது மகள் ஆவார். நான் பள்ளி சென்று படிக்கவில்லை. நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள எதிரியைத் தெரியாது. நீதிமன்றத்தில் ஆஜராகாத மற்ற எதிரிகளையும் தெரியாது. எனது கணவர் கொத்தனார் வேலை செய்கிறார். எனக்கு ஒரு ஆண் மற்றும் 3 பெண் குழந்தைகள் உள்ளது. அசா5.ஆர்த்தி எனது மூத்த மகள் ஆவார். என் மகள் ஆர்த்தி 8ம் வகுப்பு வரை படித்து, பாதியிலேயே நிறுத்திவிட்டு வீட்டில் இருந்து வந்தார். கடந்த 2016ம் ஆண்டு என் மகள் ஆர்த்தியை என் உடன் பிறந்த தம்பி கார்த்திக்ராஜாவிற்குத் திருமணம் செய்து கொடுத்துள்ளேன். என்

மகளுக்கு திருமணம் செய்து கொடுத்து 3 மாதம் கழித்து, என் மகள் வயிற்று வலி என்று என் வீட்டிற்கு வந்தார். நான் என் மகளை கூட்டிக் கொண்டு சிலைமான் அருகில் உள்ள கொந்தகை மருத்துவமனைக்கு போனோம். அங்கு என் மகள் கர்ப்பமாக இருப்பதாகச் சொன்னார்கள். அங்கு ஸ்கேன் எடுத்துப் பார்த்தார்கள். 8 மாத கர்ப்பம் என்று சொன்னார்கள். அதன் பிறகு, என் வீட்டிற்கு என் மகளை அழைத்து வந்துவிட்டேன். என் மகளுக்கு ஒரு நாள் வயிற்று வலி வந்தது. நானும் என் கணவரும் மருத்துவமனைக்கு என் மகளை அழைத்துச் சென்றோம். மறுநாள் என் மகளுக்கு ஆண் குழந்தை பிறந்தது. அதற்கு பிறகு என் மகளையும் குழந்தையுடன் discharge ஆகி வீட்டிற்கு  போகும் போது குழந்தையுடன் வீட்டிற்குப் போனால் ஊரில் தப்பாக பேசுவார்கள் என்பதால், எனது தூரத்து உறவினர் நடராஜன் மகன் சுப்பிரமணி என்பவரிடம் குழந்தையைக் கொடுத்துவிட்டு, 2 நாட்கள் கழித்து வாங்கிக் கொள்வதாகக் கொடுத்துவிட்டு எங்கள் வீட்டிற்குப் போய்விட்டோம். 2 நாட்கள் கழித்து அவரைப் பார்க்கப் போனபோது அவர் வெளியூர் சென்றுவிட்டார். அதன்பிறகு அவர் குழந்தையை எங்களிடம் கொடுக்கவில்லை. தவறான உறவில் குழந்தை பிறந்ததால், நாங்களும் அதைப் பெரிது படுத்தாமல் விட்டுவிட்டோம். போலிசார் என்னை விசாரித்தார்கள். .

**நீதிமன்ற கேள்வி** : மதுரை ஆனையூர் அஞ்சலில் உள்ள SS மருத்துவமனையில் என் மகளுக்குப் பிறந்த குழந்தையை விட்டுவிட்டு வந்தீர்களா?
**பதில்** : இல்லை. discharge ஆகி அழைத்துச் சென்றுவிட்டேன்.

**நீதிமன்ற கேள்வி** : நான் குழந்தையைக் கொடுத்ததாகச் சொல்லும் நடராஜன் மகன் சுப்பிரமணி என்பவரின் முகவரி என்ன?
**பதில்** : அவர் தற்போது எங்கு வசிக்கிறார் என்று முகவரி தெரியாது.

**நீதிமன்ற கேள்வி** : நடராஜன் மகன் சுப்பிரமணி தற்போது எங்கு உள்ளார்?
**பதில்** : அவர் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார்.

**நீதிமன்ற கேள்வி :** சுப்பிரமணியிடம் குழந்தையை மீண்டும் கேட்டேனா?
**பதில் :** கேட்டேன். சுப்பிரமணியிடம் இருந்து போலிசார் குழந்தையை வாங்கிச் சென்றதாகச் சொன்னார்.

(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)

<u>**அரசு தரப்பில் கு.வி.**</u>

போலிசார் விசாரணையின் போது, கடந்த 11.03.2016ம் தேதி பறையங்குளத்தைச் சேர்ந்த எனது தம்பி கார்த்திக்ராஜாவிற்கு, என் மகள் ஆர்த்தியைத் திருமணம் செய்து வைத்தேன் என்றும் திருமணத்தின் போது என் மகள் கார்ப்பமாக இருந்த விஷயம் எங்கள் குடும்பத்தினர் யாருக்கும் தெரியாது என்றும் திருமணம் முடிந்து 4 மாதங்களே ஆவதால், எனது தம்பி சந்தேகப்பட்டு கேட்டதற்குப் பின், என் தம்பியிடம் சொல்லியிருக்கிறாள் என்றும், அவளாகவே கொந்தகை அரசு மருத்துவமனை சென்று கர்ப்பமான விஷயத்தைச் சொல்லி கேட்டுள்ளாள் என்றும் அவர்கள் ஸ்கேன் எடுதது அதன் ரிப்போர்ட்டைப் பார்த்து சொல்வோம் என்றுள்ளார்கள், அதற்கிடையே மதுரையில் சென்று ஸ்கேன் எடுத்துள்ளாள் என்றும் என்னிடம் இதன் விபரம் சொல்லவும் நான் தவறான வழியில் கர்ப்பமானதால் உன் விருப்பப்படி செய் என்று சொல்லிவிட்டேன் என்றும் குழந்தையின்னு பிறந்தா ஊர்க்காரங்களுக்கு தெரிந்து அசிங்கமாகிவிடும் அவமானப்படனும் அதனால் இந்த குழந்தை வேண்டாம்னு முடிவெடுத்தோம் என்றும் எங்க ஊர்ல அப்புறம் இரண்டு மூன்று டாக்டர்களிடம் கேட்ட போது, இந்த நிலையில் கலைக்க முடியாதுன்னு சொன்னாங்க என்றும் அதனால் என்ன பன்றதுன்னு தெரியாமல் மதுரை அண்ணாநகரில் இருக்கும் எனது அக்கா வள்ளியிடம்

சொன்னோம் என்றும் என் அக்கா விசாரித்து சொல்கிறேன் என்று சொல்லிவிட்டு, 09.06.2016 ம் தேதி இரவு ஆர்த்தியை எனது அக்கா வள்ளி, மதுரை முடக்கத்தானில் உள்ள SS ஆஸ்பிட்டலுக்கு அழைத்துச் சென்றார் என்றும் அப்ப அங்கிருந்த டாக்டர்.சந்தி என்பவர் ஆர்த்தியை செக்கப் செஞ்சாங்க என்றும் ஆர்த்திகிட்ட எப்பயிருந்து வலி வந்துச்சுன்னு கேட்டாங்க என்றும் உடனே ஆர்த்தி எனக்கு குழந்தை வேண்டாம்னு சொல்லி அழுதாள் என்றும் உடனே டாக்டர் என்னை கூப்பிட்டு விசாரித்தார்கள் என்றும் அப்ப நான் நடந்த விஷயத்தைச் சொல்லி குழந்தை பிறந்து, குழந்தையை வீட்டிற்கு தூக்கிச் சென்றால் ஊருககுள் தலை காட்ட முடியாது என்றும் குடுமபத்தோடு தற்கொலை செய்து கொள்வோம் என்றும் கூறி அழுதேன் என்றும் என் வீட்டுக்காரரும் என் தம்பியும் ஊருக்குள் தெரிந்தால் ஊரில் அசிங்கமாகப் பேசுவார்கள் என்றும் பிரச்சினை பெரிதாகிவிடும் என்றும் கூறி அழுதார்கள் என்றும் அப்பொழுது டாக்டர் குழந்தையைக் கலைக்க முடியாது குழந்தையைக் கலைத்தால் பெரிய உயிருக்கு ஆபத்தாகிவிடும் என்று கூறினார் என்றும் மறுநாள் 10.06.2016 ம் தேதி காலையில் என் மகளுக்கு ஆண் குாந்தை பறிந்தது என்றும் நாங்கள் அந்தக் குழந்தை வேண்டாம் என்பதால் டாக்டரிடம் இந்த குழந்தையை வீட்டிற்குத் தூக்கிச் சென்றால் பிரச்சனை வந்துவிடும் என்றும் குாந்தையை யாரிடம் கொடுபபது என்ன செய்வது என்பது பற்றி விபரம் எதுவும் தெரியாது என்றும் குழந்தையை யாராவது கேட்டால் கொடுத்துவிடும் படியும் அல்லது எதாவது ஆசிரமத்தில் விட்டு விடும்படியும் கூறி சென்று விட்டோம் என்றும் வெளியில் தெரிந்தால் எங்கள் குடும்ப மானம் போய்விடும் என்பதாலும் என்னுடைய மகளின் இல்லற வாழ்க்கை பாழகி விடும் என்பதாலும் என் வீட்டார்கள் அனைவரும் அவமானப்படுவார்கள் மேலும் ஜாதிக் கலவரம் அளவிற்கு பிரச்சனை பெரியதாகிவிடும் என்பதாலும் தான் நாங்கள் குழந்தை வேண்டாம் என்று

சொன்னோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது, டாக்டர் மற்றும் அவரது உறவினர்களைக் காப்பாற்றும் நோக்கில், உண்மைக்குப் புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்) :</u>**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,மதுரை